RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2515

# குறுந்தொகைத் தலைவி- பண்பாட்டுப் பதிவுகள்

**ந. சுதா [அ,*], ச. பிரியதர்சினி [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043 தமிழ்நாடு, இந்தியா

# Kurunthogai Heroine- Cultural Records

**N. Sudha [a,*], C. Priyadharshini [a]**

[a] Department of Tamil, AvinashilingamInstitute for Home Science and Higher Education for Women, Coimbatore -641 043, Tamil Nadu, India

* Corresponding Author: 20phtmF004@avinuty.ac.in

Received: 19-08-2022
Revised: 23-10-2022
Accepted: 05-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Evidence for the Archaic Antiquity of the Tamil Language is Sangam literature. As explained in the Sangam literature, the Tamil word 'Pan' means merit. If 'padu' also means worldly morality then it can mean qualified worldly morality. Cultural levels are prevalent in Sangam literature. Domestic life is also defined as the specialty of living together even without a home. It can be realized that culture is seen in Sangam literature from the fact that the hero was very fond of the heroine and both the hero and heroine were very happy in their lives. The purpose of the article is that the culture of the poets of the Sangam period is manifested in that even though there are various emotions like hospitality, friendship, enmity, love, hatred and love. The poets of the Sangam period have chosen the high quality.

**Keywords:** Panpadu, Thaguthi, Olukkam, Panpatta Yennai.

## முன்னுரை

குறுகிய பாடல்களின் தொகுப்பே இந்நூல் என்பது இப்பெயரால் விளங்கும். நல்ல குறுந்தொகை என்றும் கூறுவார்கள் புலவர்கள். பொருளை உணர்த்துவதில்ஆழமான கருத்துக்களை கொண்டுள்ளது. குறுந்தொகையில் நாணூற்றிரண்டு பாடல்கள் உள்ளன. ஒன்று கடவுள் வாழ்த்தாக அமையப் பெற்றுள்ளது. இது பாரதம்பாடிய பெருந்தேவனாரால் பாடப்பெற்றுள்ளது. இந்நூலில் உள்ள அனைத்துப் பாடல்களும் இருநூற்றைந்து புலவர்களால் பாடப்பெற்றுள்ளன. இவற்றுள் இந்நூலின் இறுதியில் “இத்தொகை முடித்தான் பூரிக்கோ” என்பதனால் இந்நூலைத் தொகுத்தவர் அவரே எனலாம். இந்நூலானது அகப்பொருள் பற்றிக் கூறும் நூலாக அமைகின்றது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணை ஒழுக்கம் பற்றிய பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

## இலக்கியங்கள்

தமிழ் இலக்கியங்களின் வாழ்வியலை அப்படியே படம் பிடித்துக் காட்டும் ஒரு கண்ணாடியாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்து மக்களின் வாழ்க்கை, வாணிகம், பண்பாடு, பழக்க வழக்கம் முதலியவற்றை எடுத்துக் காட்டி, நம்நினைவில் நிலை நிறுத்துகின்றது. வாழ்க்கையின் முன் மாதிரியாக திகழும் நம் இலக்கியங்களில் உள்ளே நாம் நுழையும் போது நம் உணர்வுக்கும் விருந்தளிப்பதைபோலவும், உள்ளத்திற்கு அமைதி தர வல்லதாக உள்ளது. ஒவ்வொரு

இலக்கியமும் நாம் தோன்றுவதற்கு உள்ள காலக்கட்டத்தையும், அக்காலத்தின் நாட்டின் நிலையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் மக்களின் வாழ்க்கை முறையையும் பிரதிபலிப்பதாகவே உள்ளது. தமிழ்நாட்டின் மக்களின் வாழ்க்கை வரலாறு தொல்காப்பிய காலத்தில் இருந்து சங்க காலத்திலும் மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு எவ்வாறு இருந்தது என்பதை அக்கால மக்களின் வாழ்க்கை முறையைவைத்து காண முடிகிறது.

"தன்னுயிரைப் போன்று மன்னுயிரைக் காத்து 'உற்றார் மற்றார்' என்னாது, "இன்னார் இனியார்" என நோக்காது 'தமர் எனக் கோல் கோடாது பிறர் எனக்குணம் கொளாது" உயரிய பண்பாட்டில் வாழ்ந்தனர் எனச் சங்கஇலக்கியங்களின் வாயிலாக நாம் காண முடிகின்றது என கிருட்டிணன் சுட்டிக்காட்டுகிறார் (Kritinan, 1992).

## தமிழரின் பண்பு

தமிழருடைய பண்பு தனிச்சிறப்புடையது, அவர்களுடைய வரலாறு, பெருமையும், புகழும் கொண்டது, தனித்தொரு தன்மையை தமிழ் மக்கள் பெற்றும் இருந்தனர். உலக பண்பாட்டின் உயிர் நாடி என்றே இவர்களை கூறலாம். தமிழ் மக்களுடைய வாழ்வில் அகவாழ்வு, புறவாழ்வு என்று பிரித்துக் கொண்டு வாழ்க்கையை நடத்தினர். மனித வரலாற்றில் மிகத் தொன்றுத்தொட்டு சமூக வாழ்வைபகுத்துக் கொண்ட ஒரு பெருமையுடையது நம் தமிழ் மொழி.

## பண்பாடு

அன்றிலிருந்து இன்று வரை பண்பாடு என்பது இது தான் என்று கூற இயலாதநிலை என்றும், பண்பாட்டில் மட்டும்தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது என்கின்றார் கிருட்டிணன் அவர்கள் (Kritinan, 1992). தனிமனிதன் சமூகத்தோடு ஒட்டிவாழ்வதும், சமூகமானது தனிமனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாட்டின் அடிப்படையாகவே இருக்கிறது. அப்படியொரு பண்பாடு இல்லையென்றால் உலகமும் உயிரும் இயங்காது என்கின்றார் கிருட்டினன் அவர்கள் (Kritinan, 1992).

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்", எனக் கலித்தொகை சங்ககாலத்திலேயே பண்பின் தகைமையைக் குறிப்பிடுகின்றது.

பண்பாடு ஆழமான பரந்து விரிந்த பொருளை உடைய சொல். பண்பு என்பது தனிமனிதப் பண்பையும், பண்பாடு என்பது சமூகத்தின் பண்பையும் குறிப்பதாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்பது திருக்குறள் கூறும் கருத்தாகும்.

"யாரால் உலகம் வாழ்கிறது? என்ற வினாவை எழுப்பி, பண்புடையாரால் உலகம் வாழ்கிறது என்று விடை பகிர்கிறது புறநானூறு. ச.மெய்யப்பன் அவர்கள் பண்பாடு பற்றி இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்.

## பண்பாட்டுக் கூறுகள்

பண்பாட்டின் மிகச் சிறிய ஒரு அலகே பண்பாட்டுக் கூறு எனப் பெறும். ஒவ்வொரு பண்பாட்டிலும் பல்வேறு தன்மையுடைய கூறுகள் இடம் பெறுகின்றன. அவற்றின் பண்புகளைத்.கிருட்டினன் பட்டியலிடுகின்றார் (Kritinan, 1992).

பொருள் சார் கூறுகள்

அறிதல் சார் கூறுகள்

நெறியியல் கூறுகள்

என்று பண்பாட்டுக் கூறுகளை பகுக்கின்றார்.

## தலைவி

பழங்காலம் தொட்டே தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள், ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை நம் சங்க இலக்கியப் பாடல்கள் "குன்றின் மேல் இல்ல விளக்கு" போல்தெள்ளத் தெளிவாக படம் படித்துக் காட்டுகிறது. அதே போலத்தான் தலைவியும் தன் இல்வாழ்க்கையில் சிறப்புற்று திகழ்கிறாள். தலைவியின் காதலானது சிறப்புக்குரியதாக காணப்படுகிறது. திருமணத்திற்கு முன்பு உள்ள காதல் வாழ்க்கையானது வாழ்வியல் நெறிமுறையாகவே இருந்துள்ளது. திருமணத்திற்கு முன்பே உள்ள காதல் வாழ்வை "களவொழுக்கம்" என்றும், திருமணத்திற்கு பின்பு அவர்களின் இல்லற வாழ்வு "கற்பொழுக்கமாகவும்" போற்றப்பட்டுள்ளது.

## தலைவியின் பண்பு

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உயர்ந்த சிந்தனையே பண்பாட்டுக்கு அடிப்படையாகும். ஒரு செயலை இனியதாக இருந்தாலும் இல்லாவிடிலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களின் உள்ளத்தின் பண்பைபொருத்தே அமையக்கூடும். அனைத்தும் தலைவனே என்று இருக்க கூடும்தலைவிக்கு தேவருலகம் காட்டிலும் தலைவன் தான் பெரிது என்று நினைத்தவள் அப்படிப்பட்ட தலைவனை பழித்துப் பேசக் கூட விடவில்லை.

"கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து

குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்

இனியன் அகலின் இனத்தின் இயன்ற

இன்னாமையினும் இனிதோ

இனிது எனப் படுவும் புத்தேள் நாடே"

தலைவி கூறுகின்றாள் (Parimanam & Balasubramaniyam, 2004).

இதில் தலைவன் பால் அவள் கொண்டிருந்த உறுதியும், அன்பும், நம்பிக்கையும் தெளிவாக உணர முடிகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு தலைவியின் உயர்ந்த எண்ணம் அழியா வாழ்வை அளித்து உயர்ந்த பண்பாடாகவே திகழ்கிறது.

## இல்லற மாண்பு

சங்ககால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றி பேணி காக்கும் பண்பு உடையவர்களாகவே இருந்தனர் என்பதை பல்வேறு பாடல்கள் மூலம் உணரலாம். புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும் தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் இருப்பதாக குறுந்தொகை பாடல்கள் மூலம் அறியலாம். தலைவன் மீது அவள் கொண்ட காதல் (நட்பானது) இந்த புவியை காட்டிலும் பெரிதாகவே காட்டப்படுகிறது.

தலைவியானவள் செல்வச் செழிப்புடன் இருந்த நிலையில் சமைக்க கூட தெரியாத நிலையில் இருக்கும் பொழுது தன் கையால் தலைவனுக்கு சமைத்து தர ஆவல் கொண்டவளாகவும், தலைவன் மேல் உள்ள அன்பால் இல்லறத்தை நன்றாக பேணி காப்பாவளாக உள்ளாள். இதனை குறுந்தொகை பாடலில்,

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு களிங்கம் கழாஅ துடீஇக்

குவளை உன்கண் குய்ப்புகை கழுமத்

தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

இனிதுஎனக் கணவன் உண்டலின்

நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே” (Parimanam & Balasubramaniyam, 2004)

இல்லாள் செய்த உணவு எத்தகையதாக இருப்பினும் அவள் அன்புடனும் காதலுடனும் செய்ததால் அதனை இனிது என்று பாராட்டி மகிழும் தலைவனின் மனப்பாங்கையும் நற்பண்பையும் உணர முடிகிறது. தலைவன் தலைவி இருவரும் ஒருவருக் கொருவர் எவ்வாறு அன்பு பூண்டு, ஒழுகுகின்றனர் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. தமிழரின் மரபு தலைவன் பொருள் தேடச் செல்வதும் தலைவியானவள் இல்லறத்தை நன்கு பேணிக் காப்பதும் ஆகும். அப்படி தலைவியானவள், செல்வ குடியில் பிறந்தவளாக இருப்பினும் தன் தலைவன் மேல்வைத்த அன்பு காரணமாகவும், தமிழர் மரபு அடிப்படையில் இல்லறத்தை நன்கு பேணுவதுமே ஒரு பண்பாடாகவே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

## அக வாழ்க்கையில் பண்பாட்டைக் காத்தல்

பல்வேறு குண நலங்களை ஒத்த தலைவனும், தலைவியும் களவு வாழ்க்கையில்கூடி மகிழும் போது கற்பு வாழ்க்கையில் இருவரும் சேர்ந்து வாழும் போது அவர்களுடைய வாழ்க்கையில் ஒழுக்க நெறி தவறாது நாணயத்தின் இரு பக்கங்களாக இரண்டறக் கலந்து வாழ்வதை நாம் அறிய முடிகிறது.

தலைவியின்பால் மிக்க காதல் கொண்ட தலைமகனும் அவளோடு சேர்ந்து வாழ்வதை பெரும் பேறாகக் கருதுகின்றான். அதனை,

“முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்

வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே”

பாடல் மூலம் அறியலாம் (Sudhakar, 1990).

## ஐந்திணை ஒழுக்கமும் பண்பாடும்

தலைவனும், தலைவியும் கூடி வாழ்கின்ற வாழ்க்கை சங்க காலத்தில் அகத்திணை என்றும் ஐந்திணை என்றும், களவு வாழ்க்கை என்றும், கற்பு வாழ்க்கை என்றும் தொகுத்து வாழ்க்கை நடத்தியுள்ளனர். தமிழ்ச் சான்றோர்கள் எந்த மொழியிலும், எந்தநாட்டிலும் இல்லாத ஒரு வளமையான வாழ்வை வகுத்து வாழ்ந்து காட்டியுள்ளனர். மனித வாழ்வு முறைகளையும், அவன் வாழ்ந்த நிலத்தின் இயல்புகளையும் நெறிப்படுத்தி அதன் வழி வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

இயற்கையின் அடிப்படையில் எதிர்ப்பட்டு நிற்கும் தலைவனும் தலைவியும் பலவகையில் ஒத்து விளங்குதல் வேண்டும். இருவரும் ஒத்து விளங்கும் நிலையை தொல்காப்பியனார்,

“பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ

உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”

என்று கூறியுள்ளார் (Thamizhannal, 2010).

தலைவி எனப்படுபவள் அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு பண்புகளை அமைவுறப் பெற்றவளாக இருத்தல் வேண்டும். இப்பண்புகளின் உள்ளடங்கிய தன்மையே பெண்மைத் தன்மை என்கிறார் தொல்காப்பியர் (Thamizhannal, 2010)..

“அச்சமும் நாணமும் மடனும் முந்துருதல்

நிச்சமும் பெண்பாற் குரிய என்ப".

## பண்பாட்டு உள்ளங்கள்

ஊரும் பேரும் அறியாத சில தலைவர்களை முன்கொண்டு அறத்தையும் பண்பாட்டையும் வாழ வைத்த புலவர் தம் பாடல்கள் சில உள்ளன. அகத்தின் நெறியையும், அறநெறியை பற்றிய பண்பாட்டையும் பல புலவர்கள் கூறியுள்ளனர். பண்பாட்டின் சிறப்புகளை அகத்திலும், புறத்திலும் அதிகமாக காணலாம். தலைவனும் தலைவியும் கலந்து வாழும் இன்ப வாழ்வு இப்படி என்று எடுத்துக் காட்ட முடியாது. அந்த உணர்ச்சியில் அகத்திலும் மனித பண்பாடு ஒளிர்விடுவதை நம்மால் காணமுடியும். தலைவன், தலைவி தோழி ஆகிய அகப்பொருள் பாத்திரங்களில் சங்கப் புலவர்கள் எண்ணற்ற பண்பாட்டு உள்ளங்களை காட்டுகின்றனர். அகவாழ்வில் பொய்யும், குற்றமும் இல்லாத வாழ்வாக இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து வாழ்வை வாழ்ந்துள்ளனர்.

உள்ளத்தையும் உணர்வுகளையும் எல்லாவற்றையும் முன்பின் அறியாத தலைவி களவு காலத்தில் உரிமையாக்கினாள். வெட்கப்பட்டு தலைவியானவள் தலைவனின் ஊரையும் பேரையும் கேட்டறிய மறந்து விட்டாள். பொருள் தேடி சென்ற காலமும் நீடித்து விட்டது. ஆனால் தலைவியானவள் தன்னோடு பேசிக் கொண்டாள். அதனை,

"யாரும் இல்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?

தினைத்தா என்ன சிறுபசுங் கால"

தலைவனை தன் மனதில் என்னும் இப்பாடல் தலைவியின் மிகச்சிறந்த மன ஒழுக்க பண்பாட்டை உணர்த்துவதாக அமைகின்றது" (Parimanam & Balasubramaniyam, 2004).

## தலைவியின் இல்வாழ்க்கைப் பண்பாடு

தலைவன் தலைவியை பிரிந்து பரத்தையரிடம் ஈடுபட்டான். நாள்கள் பலகடந்து இல்லம் திரும்பினான் தலைவன். தலைவியானவள் தலைவனை எண்ணி மட்டுமே வாழ்ந்தவளாக இருந்தாள். ஏழு பிறவிகள் ஆனாலும் நாம் இருவரும் காதலர்களாக பிறக்க வேண்டும் என்று தன்னுடைய விருப்பத்தை அவனிடம் கூறுகின்றாள்.

"அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முன்பகத்து

மணிக்கேழ் அன்ன மாணீர்ச் சேர்ப்ப

இம்மை மாறி மறுமை ஆயினும்

நீ ஆ கியர்என் கணவனை

யான்ஆ கியர் நின் நெஞ்சுநேர் பவளே!"

தலைவனின் மன மாறுதல்கள் கொண்ட செயல்களை தலைவி அறிந்திருந்தும், தலைவியானவள் தன்னுடைய தலைவனை எண்ணி காத்திருக்கக்கூடிய அந்த அன்பும், ஒழுக்கமும் மிகச்சிறந்த பண்பாடாக இங்கு வெளிப்படுத்துகின்றாள். தலைவன் பரத்தையோடு இருந்தாலும் தலைவியானவள் மனம் மாறாமல் தலைவனை எண்ணி இருக்கும் ஒழுக்கம் பண்பாடாகவே கருதப்படுகிறது" (Parimanam & Balasubramaniyam, 2004).

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தன் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (Puliyur Kesigan, 2009)

வள்ளுவர் வாக்குப்படி மனைக்கு மாண்புடையவளாக கணவனுக்கு பெருமை ஏற்படும் வகையில் இல்வாழ்க்கை நடத்த வேண்டு மென்பதை குறிக்கிறது. தொல்காப்பியர் பெண்ணறங்களை,

"செறிவும், நிறைவும், செம்மையும், செப்பும்,

அருமையும், பெண்பாலருக்குரிய சிறந்த குணங்கள்"

பெண்மையின் சிறந்த குணங்கள் பற்றி குறிப்பிடுகிறார் (Thamizhannal, 2010)..

## விருந்தினரை எதிர்ப்பார்த்தல்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தின் தலையாய நெறியாகும். முன்பின் அறியாத புதிய மனிதர்களை வரவேற்று உபசரிப்பதே 'விருந்தோம்பல்' என்படும். 'விருந்து' என்ற சொல்லுக்கு புதுமை என்று பொருள் கூறுகிறார் தொல்காப்பியர். பழந்தமிழரின் பண்பாட்டு கூறுகளில் விருந்தினரைப் வரவேற்றல் என்பது உயர்ந்த இடம் பெறுகிறது. விருந்தினர் என்பார் புதியவரைக் குறிக்கும். முன்பின் தெரியாதவரை குறிக்கும். தெரிந்த குடும்பத்தைப் பேணுதல் காட்டிலும் தெரியாத குடும்பத்தைப் பேணுதல் உயர்ந்த பண்பாகவே கருதினர். அனைவரையும் அரவணைக்கும் பண்பைப் பெற்றவர்களாக இருந்தனர். இரவில் வாயில் கதவை தாளிடுவதற்கு முன்னர் தெருவில் யாரேனும் தெரியாதவர்கள் வருகின்றார்களா என்று பார்க்கும் வழக்கம் இருந்தது. அவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு வரவேற்கும் பழக்கம் இருந்தது.

"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய

நள்ளென வந்த நாரின் மாலைப்

பலர்ப்புகு வாயில் அடைப்பக் கடவுனர்

வருவீர் உளீரோ"

இரவு பட்டினி கூடாது என்ற எண்ணத்தில் உணவு கொடுக்கும் விருந்தோம்பல் பண்பு தமிழர்களிடையே இருந்தது என்பதை தலைவியின் பாடல் மூலம் அறியலாம்" (Parimanam & Balasubramaniyam, 2004).

"விருந்தோடு நல்லவை வேண்டற்கண்ணும்"

"விருந்துபுறம் தருதல் சுற்றம் ஒம்பல்"

என்பதில் உறவினரையும் சுற்றத்தினரையும் ஓம்பும் பண்பு தலைமக்களுக்கு வேண்டிய இல்லறக் கடமை என்கின்றார் தொல்காப்பியர் (Thamizhannal, 2010).

கடல் பிறகோட்டி செங்குட்டுவனின் விருந்தோம்பல் பண்பை குறிப்பிடும் பரணர் பெரும் உன்னை நாடி வந்த புலவர்கள் உண்பனவற்றை ஒம்பாது உண்ணச் செய்து, அவருடன் அமர்ந்து உணவு உட்கொண்டு, இன்பச் சுவை நல்கும் பாணர், கூத்தர் முதலியவர் நிரம்பப் பெறுமாறு நீ நல்ல பொன் அணிகளை எல்லையில்லாது தந்தனை என்கின்றார். இதனை,

"உருவர்ஆர ஓம்பாது உண்டு

நகைவர்ஆர நன்கலம் சிதறி"

என்ற அடிகள் விருந்தோம்பல் பண்பை சுட்டுகின்றன. விருந்தோம்பல் என்ற ஒன்று நம் தலையாய பண்பாடாகவே இருந்து வருகின்றன (Sudhakar, 1990).

## முடிவுரை

சங்க இலக்கிய பாடல்களின் வாயிலாக தமிழர்களின் வாழ்வும் பண்பாடும் இன்றைய மக்களுக்கு ஒரு உதாரணமாக அமைந்துள்ளது. தலைவியானவள் நற்பண்புகளோடு இல்லற

வாழ்க்கையை பின்பற்றி புதல்வனை ஈன்று வாழ்க்கையை சிறக்க வாழ்ந்து வந்தனர். களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் மிகச்சிறந்த ஒழுக்கம் என்ற பண்பாட்டை பேணிக் காத்தவளாகவே வாழ்ந்திருக்கிறாள். இல்லறத்தை பேணி காப்பதுமே தமிழர் உடைய பண்பாடுதான் அப்படிபட்ட தமிழர் மரபை காத்து நின்றவளாக செயல்படுகிறாள். தலைவனின் மன மாறுதல்களைக் கண்ட போதிலும் தலைவியானவள் தன் மனம்மாறாமல் தன் தலைவன் மீது கொண்ட அன்பும், அவளுடைய மன ஒழுக்கமும் பண்பாட்டின் அடிப்படையிலே அமைகிறது. உணவு கொடுக்கும் விருந்தோம்பல் பண்பும் சங்க காலத்தில் இருந்தது என்பது தலைவியின் விருந்தோம்பல் பண்பின் மூலம் புலப்படுகின்றது. தமிழர் மரபு, ஒழுக்கம், விருந்தோம்பல் பண்பு ஆகியவை தலைவியின் தனிப்பண்பாகவே இருந்ததுள்ளது. தமக்கென ஒரு சிறந்த பண்பாடுகளை சங்க கால மக்கள் வாழ்ந்து வந்திருப்பது இன்றைய சமூக மக்களுக்கு ஒரு அடித்தளமாக அமைந்துள்ளது.

## References

Kritinan, A. (1992) Tamilar Panpattuyial, Manivasaka Publishing House, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Sudhakar, V. (1990) Pathupattu, Varthaman Pathippagam, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License